# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**250/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திருமதி. அருணா | ஊர் | : | முனிசிபல் காலனி |
| க.பெ. | : | திரு.அபினேஷ்குமார் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 37 | தொழில் | : | பொறியாளர் |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம்28-ஆம் நாள் **பி.சா.2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

நான் தற்போது தஞ்சாவூர் முனிசிபல் காலனியில் வசித்து வருகிறேன். பொறியாளர் தொழில் செய்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் திட்ட மதிப்பீடு நான் கொடுத்ததுதான் அது ஏற்கனவே வா.சா.ஆ.2 ஆக குறியாகியுள்ளது. சவரிமுத்து என்பவர் கேட்டதன் அடிப்படையில் அந்த திட்ட மதிப்பீடு 2022இல் தயார் செய்து கொடுத்தேன். நான் ஏற்கனவே கட்டியிருந்த கட்டிடத்தை பார்த்து அதன் தன்மையின் அடிப்படையில் தயார் செய்து கொடுத்தேன். நான் அந்த கட்டிடத்தின் வரைபடம் கொடுத்ததை பார்த்து அளவுகளை பார்த்து நேராக சென்று கட்டிடத்தை பார்த்து திட்ட மதிப்பீடு தயார் செய்தேன். நான் ஆய்வு செய்யும்போது வழக்கிருப்பது எனக்கு தெரியாது. நான் ஆய்வு செய்யும்போது சவரிமுத்துவும் சகோதரி ஒருவரும் இருந்தார். சவரிமுத்துவன் சகோதரி ஒருவர் ஆய்வு செய்வதற்கு தடை செய்தார். அந்த கட்டிடம் 564 சதுரடி உள்ளது. அந்த கட்டிடம் முழுமையாக கட்டிமுடிக்கபட்ட கட்டிடமாகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ. 5 ஆவணத்திலுள்ள புகைபடங்கள் நான் பார்த்த கட்டிடமாகும். கட்டிடத்தின்மேலே முழுமையாக வேலை முடிக்கபட்டிருந்தது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்

நான் சொல்வதுபோல் வேலை முடிக்கபடவில்லை என்றும் கதவுகள் போடப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான்பார்த்தபோது கட்டிடத்தில் பிரதமமந்திரி திட்டத்தின் கீழ் வழங்கபட்ட வீடு என்று மேலே போர்டு இருந்தது என்றால் நான் கவனிக்கவில்லை. நான் பார்த்தேன் என்றும் நான் பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முழுமையாக ஆய்வு செய்யாமல் அறிக்கைகொடுத்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் கொடுத்த வரைபடத்தில் கட்டிட அனுமதி இருந்ததா என்றால் ஒருபொறியாளரிடம் வரைபடம் வாங்கி கொடுத்தார்கள் அதனடிப்படையில் கொடுத்தேன். அந்த பொறியாளர் பெயர் என்ன என்றால் தெரியாது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் அவ்வாறு கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடு எவ்வளவு சதுரடி என்றால் 269 சதுரடி. நான் பார்வையிட்ட வீட்டின் கட்டுமானம் எவ்வளவு என்றால் 564 சதுரடி. பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டிற்கு கழிவறை மாடிபடி கிடையாது என்றால் ஆமாம். நான் பார்த்த தாவா சம்மந்தபட்ட வீட்டில் மாடிபடி கழிவறை இருந்ததா என்றால் இருந்தது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.28 14:48:15 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**